அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 37/94

எனது இல. 1/543E/832D(1)
அரசாங்க நிருவாக, பாராளுமன்ற அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1994, ஒக்ரோபர் 21ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## வயது 60க்கு மேற்பட்ட அலுவலர்கள்

கூட்டுத்தாபனங்கள் பற்றும் சபைகள், இராணுவப் படைகள் மற்றும் பொலீஸ் படைகள் உட்பட அரசாங்க சேவையில் வயது 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, ஒப்பந்தத்தில் ஆட்சேர்க்கப்பட்ட ஆட்கள் அனைவரையும் நிறுத்துவதென அரசாங்கம் 1994, ஆகஸ்ட் 31ஆந் திகதியன்று தீர்மானித்துள்ளது. இதுபற்றி அரசாங்கம் 1994, செப்ரெம்பர் 28ஆந் திகதியன்று பின்வரும் தீர்மானங்களையும் எடுத்துள்ளது.

(அ) இத்தீர்மானம் செயற்படுத்தப்படுவதை ஒவ்வோர் அமைச்சும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஆ) இப்போதைய ஒப்பந்தத்தின் காலவரையறை முடிவடையும்வரை ஓர் ஆளைச் சேவையில் வைத்திருக்கலாம்.

(இ) மேலே விதித்துரைக்கப்பட்டுள்ள விதிக்கு விதிவிலக்கு எதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

02. இதற்கமையத் தயைபுரிந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஆர். எஸ். ஜயரத்ன

செயலாளர், அரசாங்க நிருவாக, பாராளுமன்ற அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.